[2011 ஜனவரி 10

9—

மேம்பாலம்

***54478—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசபாளையம், சத்திரப்பட்டி சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், இராசபாளையம்-சத்திரப்பட்டி சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்கக் கோரியுள்ள இடத்தின் இருப்புப் பாதையினுடைய போக்குவரத்து செறிவு 35,366 மட்டுமே ஆகும். இது இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்குத் தேவையான, இரயில்வே துறையினுடைய விதிமுறை என்கிற நாள் ஒன்றுக்கு 1,00,000 Train Vehicle Units *என்கிற போக்குவரத்து செறிவைவிடக் குறைவாக உள்ளது. எனவே, வருங்காலத்தில் போக்குவரத்து செறிவு உருவாகும்போது அதன் அடிப்படையில் சாலை மேம்பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.*

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையம் நகரிலிருந்து சத்திரப்பட்டி வழியாகச் செல்லும் அந்தச் சாலையில், சத்திரப்பட்டி அருகில் மிகவும் அதிகமான கிராமங்கள் உள்ளன. அதேபோல, கிழக்குப் பக்கத்திலிருந்து நகருக்கு வரக்கூடிய பள்ளிக் குழந்தைகளும், அதேபோல இந்தச் சாலையில் அதிகமான தொழிலாளர்களும் செல்வதாலும், கிழக்குப் பகுதியிலிருந்து கர்ப்பிணிப் பெண்கள் அதிகமாக நகர்ப் பகுதியில் உள்ள மருத்துவனைக்கு வரக்கூடிய சூழ்நிலை இருப்பதாலும் அப்பகுதியில் மேம்பாலத்தை விரைவில் அமைத்துத் தந்தால் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

2011 ஜனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய சாலையானது இராசபாளையம்-வெம்பக்கோட்டை சாலை (SH-186) என்கிற ஒரு மாநில நெடுஞ்சாலையாகும். இந்தச் சாலையினுடைய மொத்த நீளம் சுமார் 23 கிலோ மீட்டர். இராசபாளையத்திலிருந்து வெம்பக்கோட்டை செல்லக்கூடிய பகுதியில் சுமார் 0/8-வது கிலோ மீட்டரில் அமைந்திருக்கக்கூடிய அந்த இரயில்வே கடவிலே பாலம் வர வேண்டுமென்று சொன்னால், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல இரயில்வே துறையினுடைய விதிமுறையைவிட குறைவாக இருக்கிறது. அவர்கள் எதிர்பார்க்கிற Train Vehicle Units என்கிற, நாள் ஒன்றுக்கு அந்த இரயில் பாதையில் செல்லக்கூடிய இரயில்களினுடைய எண்ணிக்கையையும், அந்தச் சாலையில் செல்லக்கூடிய வாகனங்களினுடைய எண்ணிக்கையையும் பெருக்கினால், நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் Train Vehicle Units வர வேண்டும். தற்சமயமுள்ள கணக்குப்பிரகாரம் பார்க்கிறபோதுகூட 60,000 Train Vehicle Units என்கிற கணக்குதான் வருகிறது. எனவே, ஒரு இலட்சத்தை அது கடக்குமானால் இரயில்வே துறையினுடைய முன்மொழிவு மாநில அரசுக்கு வரும். எனவே, மாநில அரசுக்கு வருகிறபட்சத்தில் அந்த பங்களிப்புத் தொகை 50 சதவிகிதத்தை ஏற்றுக்கொள்ள, அரசு அதற்குரிய உத்தரவை வழங்கி எதிர்காலத்திலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமேயொழிய, தற்சமயம் அந்தப் பகுதியிலே சாலை மேம்பாலம் அமைப்பதற்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

திருமதி மு. சந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையத்திலிருந்து சத்திரப்பட்டி வழியாகச் செல்வதற்கு, கிழக்குப் பகுதியிலிருந்து மேற்குப் பகுதிக்கு வருவதற்கோ, நகரிலிருந்து அங்கு போவதற்கோ, காலை, மதியம், சாயங்காலம் ஆகிய 3 வேளையும் கரெக்ட்டாக பள்ளிப் பிள்ளைகள் போவதற்கும், அதேபோல பணியாளர்கள் செல்வதற்கும், அனைவரும் போய் வருவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால்

[2011 ஜனவரி 10

அதை மனதில் கொண்டு, இவ்வளவு வண்டிதான் வர வேண்டும், அதற்குப் பிறகுதான் செய்து கொடுப்போம் என்று சொல்வதைவிடுத்து, மக்களுக்குத் தேவையானதை கரெக்ட்டாக செய்து கொடுங்கள் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரயில்வே கடவு என்பது பல ஆண்டு காலமாக இருக்கக்கூடிய ஒன்று. அந்த அடிப்படையிலே, இந்த விதிமுறையின் அடிப்படையிலே இரயில்வே துறை அனுப்புகிறது. கடந்த 5 ஆண்டுகாலமாக 104 பாலங்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். கடந்த காலத்தைப் பற்றிச் சொன்னால் அது அரசியலாகக்கூடும். 104 பாலங்கள் என்பது நமது முதல்வர் அவர்களின் வரலாற்றுச் சாதனை. எனவே, எதிர்காலத்திலே 6-வது முறையாக தலைவர் கலைஞர் அவர்கள் அரசு வரப்போகிறது. அப்போது அந்தப் பாலம் அமையும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

முற்பகல் 10-40

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட சோலையார்பேட்டையிலே L.C. 86 என்ற இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்காக மத்திய அரசு ஏறக்குறைய 20 கோடி ரூபாய் அனுமதி அளித்து, கடந்த ஆண்டு பட்ஜெட் புத்தகத்திலே வெளிவந்தது. அதை இரயில்வே துறை அமைச்சர் 2009 ஆம் ஆண்டு இரண்டாண்டுக்கு முன்பே அடிக்கல் நாட்டியும் இன்னும் மேம்பாலம் கட்டப்படாத காரணத்தினால் பொதுமக்களிடத்திலே மிகப் பெரிய பதட்டம் ஏற்பட்டிருக்கிறது. போக்குவரத்து நெரிசல் காரணமாக கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி போல திருப்பத்தூர் தொகுதியும் இந்த நாட்ராம்பள்ளி தொகுதியும் துண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த L.C. 86-ஐ நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டிற்குள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

2011 ஜனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, வரலாற்றில் இல்லாத அளவிற்கு புதிய இரயில்வே மேம்பாலங்கள் கடந்த நான்கரை ஆண்டுகாலமாக தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இதிலே எங்கள் தென்காசி கடையநல்லூர் பகுதியை இணைக்கின்ற இரயில்வே மேம்பாலத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு நம்முடைய அமைச்சர் அவர்களும், நம்முடைய துணை முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் எல்லோரும் நேரிலே வந்து கால்கோள் விழா நடத்தப்பட்டு இப்போது பணி நடந்து கொண்டிருக்கின்ற வேளையிலே இரயில்வே தண்டவாளங்கள் போகின்ற பகுதிக்கு மேலே உள்ள அந்தப் பாலப் பணிகள் இரயில்வே துறையால் செய்யப்பட வேண்டும். அதற்கு இரண்டு புறமும் இருக்கின்ற பணிகள் நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய ஒப்பந்தக்காரர் மூலமாகச் செய்யப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்பட்டு வருகின்ற பணி ஏறக்குறைய 90 விழுக்காடு முடிந்துவிட்ட சூழ்நிலையிலே இரயில்வே தண்டவாளங்கள் மேலே போவதற்காக உள்ள பகுதிகளிலே Drawing ரெடியாகவில்லை என்று கடந்த வாரம் சொன்னார்கள். இதிலே என்ன நெருக்கடி எங்களுக்கு வருகிறதென்று சொன்னால் பிப்ரவரி மாதத்திற்குள் அந்தப் பணியை முடிக்க வேண்டும். பிப்ரவரி மாதத்திற்குள் அந்தப் பணி முடிந்தால் சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இந்த மக்கள் வைத்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்த இரயில்வே பாலம் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கும். ஆனால் இந்த பிப்ரவரி மாதம் தேர்தல் விதிமுறைகள் வந்த பிறகு அந்தப் பாலத்தைத் திறக்கவும் முடியாது. பயன்படுத்தவும் முடியாது. ஆகவே, என்னுடைய வினா

என்னவென்று சொன்னால், பெருஞ்செலவிலே மேற்கொள்ளப்படுகின்ற இதைப்போன்ற பணிகளுக்கு இரயில்வே துறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் அணுகு சாலைக்கான நில ஒப்படைப்புக்கு வருவாய்த் துறை ஆகிய 3 துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்பார்வை செய்து எல்லாப் பணிகளும் ஒரே நேரத்தில் நடப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தத் தென்காசி பகுதியிலே இருக்கின்ற அந்த இரயில்வே கடவு மேம்பாலம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அனுமதிக்கப்பட்டு, அந்தப் பணிகள் விரைவாக நடைபெற்று வருவதை அவரே தெரிவித்திருக்கிறார். இரயில்வே துறையினுடைய பகுதியான அந்த பாக்கிப் பகுதியைச் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே கவனத்தில் கொண்டு வந்திருக்கிறார். இரயில்வே துறையோடு தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். சேவை சாலையைப் பற்றியும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, நில எடுப்புப் பணியிலே மாவட்ட நிர்வாகத்தோடு கலந்து பேசி அதையும் விரைவுபடுத்தி அந்தச் சேவை சாலையை அமைப்பதற்கும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை செல்லூர் இரயில்வே மேம்பாலம் குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மதுரை மக்களுக்கு உகந்த, மகிழத்தக்க செய்தியை இப்பேரவைமூலம் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2011 ஜனவரி 10]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக முதல்வராக இருந்தபோது 2000 ஆண்டில் அறிவிக்கப்பட்ட அந்த செல்லூர் இரயில்வே பாலப் பணி முழுமை பெற்றிருக்கிறது. அதைத் திறப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தேதி பெறப்பட இருக்கிறது. அந்த இரயில்வே சாலையை மதுரை மக்கள் பயன்படுத்துவதற்கு நிச்சயமாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

அங்கன்வாடி கட்டடம்

***110175—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளைக்குட்டை காலனி பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி செல்லப்பிள்ளைக்குட்டை காலனி பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

முற்பகல் 10-45

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் ஒன்றியம் செல்லப்பிள்ளைக்குட்டை காலனி பகுதியில்